செ. கு. எண்: 149 நாள்: 19.06.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.6.2013

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கூத்தூர் கிராமம் அருகே 10.6.2013 அன்று தனியார் பேருந்தும், தூத்துக்குடியிலிருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும் மோதியதில், அரசுப் பேருந்தில் பயணம் செய்த சென்னை, புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த திரு. புதுராஜா என்பவரின் மனைவி ராஜபுஷ்பம் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் கிராமம் அருகே 12.6.2013 அன்று சென்னையிலிருந்து திருச்சி சென்றுகொண்டிருந்த அரசு விரைவு பேருந்து, திருச்சியிலிருந்து சென்னை வந்து கொண்டிருந்த டேங்கர் லாரி மீது மோதியதில், தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பிச்சைமுத்து என்பவரின் மகன் லாரி ஓட்டுநர் சிவக்குமார், பேருந்தில் பயணம் செய்த திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், ஓடைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்லப்ப கவுண்டர் என்பவரின் மகன் செல்வராஜ், அவரது மகன் பிரவீன்குமார், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், சேவிக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாங்குடி என்பவரின் மகன் சாத்தப்பன் ஆகியோர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், மேலகிருஷ்ணன்புதூர், நரிஓடைப்பாலம் அருகே 13.6.2013 அன்று இரு சக்கர வாகனம் மீது அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மதுசூதனபுரம் கிராமம், முகிலன்விளை பகுதியைச் சேர்ந்த தினேஷ்பாபு என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கைலாசபட்டி கிராமம், திண்டுக்கல் – தேசிய நெடுஞ்சாலையில் 15.6.2013 அன்று கார் மீது அரசுப் பேருந்து

மோதியதில், காரை ஓட்டிச் சென்ற சீத்தாராமன் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த ராஜபுஷ்பம், சிவக்குமார், செல்வராஜ், பிரவீன்குமார், சாத்தப்பன், தினேஷ்பாபு மற்றும் சீத்தாராமன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்துகளில் உயிரிழந்த ராஜபுஷ்பம், சிவக்குமார், செல்வராஜ், பிரவீன்குமார், சாத்தப்பன், தினேஷ்பாபு மற்றும் சீத்தாராமன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**